Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தனக் கெக்டு எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 15
இதழ் 332

யாழ்ப்பாணம் வாரமி 28 ஜாக்கிர் 24 புதன்கிழமை (12-1-72)

JAFFNA UNDERGRADUATE LIBRARY 12 JAN 1972

நாயகி
நாயகனாம் கமழும்
சுண்முகா 'ஜவ்வாது
ஊதுபத்திகளை உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்களும் :-: ஏகவிநியோகஸ்தர்களும்
ஆ. இராசையா அன் சன்ஸ்
(மருந்துக் கடை)
காங்கேசந்துறை ரோட்
யாழ்ப்பாணம்.

பதிவு செய்யப்படும் படப்பிடிப்பாளர்கள்

பத்து ஆண்டுகள் நிலைக்கும் படங்களை எடுக்கவேண்டும்

அடையாள அட்டைத் திட்டம் பெப்ரவரியில் செயல்படும்

கொழும்பு, திங்கள்

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதற்கு புகைப்படங்களை எடுத்துதர தகுதியான புகைப்படப்பிடிப்பாளர்களை சம்பந்தப்பட்ட இலாகாவினர் பதிவு செய்து கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள்.

எடுக்கப்படும் புகைப்படங்கள் பத்து ஆண்டுகளுக்கு தாக்குபிடிக்கக் கூடியவையாக இருக்கும் என்று இந்தப் புகைப்படப் பிடிப்பாளர்கள் உத்தரவாதமளிக்க வேண்டுமெனக்கோரப்படுவதாகத்தெரிகின்றது.

குட்டிக் பதிவுபட்டத்தின்படி நாட்டிலுள்ள 18 வயதுக் மேற்பட்ட அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படும். நாட்டில் சட்டவிரோதமாகத் தங்கி விடுப்பவர்களை குறிப்பாக கள்ளக் குடியேற்றக்காரர்களை கண்டுபிடிப்பதற்கு இத்திட்டம் பெரிதும் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பல்வேறு பகுதிகளிலும் நியமிக்கப்படும் புகைப்படப் பிடிப்பாளர்கள் தினமும் 500 பேரைப்படம் பிடித்துதர வேண்டும் எனக் கோரப்படும் என்று தெரிகின்றது.

இவர்களுக்கு விசேஷ விலைகளுக்கு காமிராக்கள், பிலிம்ரோல்கள், கடதாசிகள் ரசாயனப் பொருட்கள் முதலியன கொடுக்கப்படும். சம்பந்தப்பட்ட ஆளின் காது, மூக்கு, தாடி, உதடு நெற்றி முதலியவை தெளிவாகத் தெரியும் வகையில் 1 8/3 அங்குல அளவில்

(6-ம் பக்கம் பார்க்க)

கிழக்கு ஜேர்மனி அங்கீகரித்தது!

புதுடில்லி, ஜன. 11

கிழக்கு ஜேர்மன் அரசாங்கம் புதிய பங்ளாதேஷ் அரசை முறைப்படி அங்கீகரித்துள்ளது

புதுடில்லியிலுள்ள பங்ளாதேஷ் பிரதிநிதி திரு. சவுத்திரியிடம் இந்தச் செய்தியைத் தெரிவித்தார்

கிழக்கு ஜேர்மன் ஜனாதிபதி திரு. உல்பிரிச், பிரதமமந்திரி திரு. விலிஸ்டோல் ஆகியவர்கள் பங்ளாதேஷ் அரசை வாழ்த்திச் செய்திகள் அனுப்பியுள்ளார்கள்

பாகிஸ்தானில் வடமேற்கு எல்லை மாகாணத்திலும் பலூஸ்தானிலும் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அதிபர் பூட்டோ பேஷாவர் புறப்பட்டுப் போயிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன

இந்தியத் துணைக்கண்டம் இந்தியா-பாகிஸ்தான் என இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டியேற்பட்டதற்கு முதன்மை ஸ்தானம் வகித்த திரு. மவுண்ட் பேட்டன் பிரபு வலை தெரிவித்துள்ளார்.

வியாபாரிகள் தகவல் திரட்டு கொடுக்கவேண்டும்

கொழும்பு, செவ்வாய்

வியாபார மொத்த விற்பனவுச் சங்கத்தில் செய்யப்பட்ட புதிய மாற்றம் நடைமுறைக்கு வருகிறது. இன்படி 18 ஆயிரத்து 750 ரூபா மொத்த விற்பனவு செய்யும் எல்லா விற்பனவு நிலையங்களும் தங்கள் வருமானம் பற்றிய தகவல்களை இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.

இச்சட்டத்தின்கீழ் கடனுக்குப் பணம் கொடுத்தல் ஈடுபிடித்தல் வட்டிக்குக் கடன்கொடுத்தல் அடைவு பிடித்தல் போன்றவையும் உள்ளடங்குகின்றன.

இறந்தவரும் மக்கள் கமிட்டியில்!

விசாரணை நடத்துமாறு யாழ். மாநகரசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண தொகுதியில் நிறுவப்பட்ட மக்கள் கமிட்டியில் இறந்தவர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஒரே குடும்பத்திலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவித்து மக்கமிட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை தற்காலிகமாக நிறுத்திவைத்து விசாரணை நடத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சரை கோரும் தீர்மானம் யாழ். மாநகரசபை மன்றக் கூட்டத்தில் நிறைவேறியது.

மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. சே. வி. செல்வநாயகம் கொண்டு வந்த இத்தீர்மானத்தை திருமதி அந்தோனிமுத்து சுவாமிநாதர் அனுமதித்தார்.

அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

(5 ம் பக்கம் பார்க்க)

காரில் பிரசவித்த தாயை வார்ட்டில் அனுமதிக்க மறுப்பு?

யாழ்ப்பாணம், புதன்

ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும் வழியில் காரில் பிரசவித்த பெண்மணி ஒருவரை ஆஸ்பத்திரி வார்டில் அனுமதிக்க மறுத்த சம்பவம் ஒன்று நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

மீசாலையிலிருந்து பிரசவ வேதனையுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை நோக்கி காரில் விரைந்து கொண்டிருந்தபோது திருமதி நாகலிங்கம் என்ற பெண்மணி ஆஸ்பத்திரியை அடையுமுன்னர் காரிலேயே ஆண் முந்தையொன்றை பிரசவித்துவிட்டார். அந்தத் தாயையும், குழந்தையையும் வார்டில் அனுமதிப்பதற்காக அவருடன் காரில் வந்த உறவினர்கள் யாழ் ஆஸ்பத்திரிக்கு காலை 5-30 மணியளவில் கொண்டு சென்றனர்

காரில் பிரசவித்த தாயாரை வார்ட்டில் அனுமதிப்பதில்லை என்று கூறி, முதலாம் வார்ட்டிலுள்ள தாதிகள் அவரை அனுமதிக்க மறுத்துவிட்டனர் என்றும். அந்தத் தாயும் குழந்தையும் மலமணிநேரம் வரை காரிலேயே இருக்க நேர்ந்ததாகவும் இதனால், அந்தத் தாய் மிகவும் கஷ்டமடைந்ததாகவும் பலர் எடுத்த முயற்சிகளின் பின்னர் அந்தத் தாயை வார்டில் அனுமதித்ததாகவும் நேரிடையாக நமது நிருபர் தெரிவித்தார்

இதுபற்றி முதலாம் வார்ட் பொறுப்பு அதிகாரியிடம் விசாரித்தபோது, காரில் பிரசவித்தவர்களை வார்டில் அனுமதிக்கக்கூடாது என்று விதி இல்லையென்றும் இதுபற்றி விசாரணைசெய்வதாகவும் கூறினார் வைத்திய கலாநிதியிடம் விசாரித்தபோது இவ்வித விதி இல்லையென்றும். ஆனால் இதுபற்றி எவ்வித புகாரும் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை என்றும் இதுபற்றி விசாரணை செய்வதாகவும் சொன்னார் (உரும். நிரு)

நகை அடைவு பிடிப்பாளர் சங்கம்
யாழ்ப்பாண மாவட்டம்

மேற்படி சங்கப் பொதுக்கூட்டம் 14-1-72 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். நகர் ஜம்மா பள்ளிவாசல் வீதி, மலாய இலங்கையர் சங்க மண்டபத்தில் நடைபெறும்

புதிய வரவும் மற்றும் பிரச்னைகளும் பரிசீலனை செய்யப்படும்.

அடைவு பிடிப்பாளர்கள் யாவரும் அழைக்கப்படுகின்றனர்.

காரியதரிசி
அடைவு பிடிப்பாளர் சங்கம்.

125, சிவன் கடக்கு வீதி,
யாழ்ப்பாணம்
11-1-72

3371

வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டு வேலைகள் பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3846

வாடகைக்கு

மின்சாரம், குழாய் நீர் நவீன வசதிகளுடன் வீடொன்று 15 தொடக்கம் வாடகைக்குண்டு 112 கண்டி வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி 7211 3865

வைத்தியம்

வாதம், பிரதி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ் வல்லிபுரம். (D A M.) தங்கராஜா வைத்தியசாலை, இராசவீதி, நல்லூர் மார்க்கெட் யாழ்ப்பாணம். 3817

விற்பனைக்கு

குங்குமம், கண்ணைக்கவரும் பல வகைகளிலும் கரிச்சனைக் குங்குமம் மீனாட்சி குங்குமம் முதலிய பல தினுசுகள் பெற்றுக்கொள்ளலாம். எஸ் கப்பி/மணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3845

தேவை

The Jaffna Education Centre- யாழ்ப்பாணக் கல்வி நிலையம் மகளிர் கல்லூரி வீதியில் சமையல், தையல், சம்பிரதம் பக்வேறு கைப்பணிகள் கற்பிப்பதற்கு முழுநேர, அரைநேர ஆசிரியர்கள் தேவை. தகைமைப்பத்திரங்களுடன் 17-1-72-க்கு முன்னர் விண்ணப்பிக்க. 304/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3873

ஆரோசனை இலவசம் பல கட்டுகள் அரைச் சவர் Rs 150/- சிங்கப்பூர் பல கட்டுமிடம், A S. சங்கரப் பிள்ளை கட்டிடம் 2ம் மாடி ஆஸ்பத்திரி வீதி - பெரிய கடை, யாழ்ப்பாணம். 3869

விற்பனைக்கு

நல்ல பழக்கமுள்ள உயர்தர அல்சேஷன் ஆண் பெண் நாய்கள் விற்பனைக்குண்டு. இனவிருத்திக்காகச் சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்களும் எம்மிடம் உண்டு. க. நடேசன், 15, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 3811

தேவை

இரசாயனம், பௌதிகம், உயிரியல், பிரயோக கணிதம் ஆகிய பாடங்கள் G.C.E (O/L) வகுப்புகளுக்கு கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை. தகைமைகளைக் குறிப்பிட்டு உடனே விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு: கலைவாணி கல்வி நிலையம், எதிரிப்பாய், அச்சுவேலி 3864

SALES

Scooter 5 Sri 7537 Lambretta 150 C. C for immediate Sale. Sundaraligam. Jeya Electronics, Jaffna Road Kankesanthurai 3874

மரணஅறிவித்தல்

கல்லூரம் வைத்தியக் கலை உரிமையாளரும், கோப்பாய்க்காடு, மல்லாகத்தைச் சேர்ந்தவருமான திரு. நா. இராமலிங்கம் அவர்கள் காலமாகி விட்டார். இவர் திருமதி இலக்குமி அவர்களின் அன்புக் கணவரும், திருவாளர்கள் தம்பிராசா, கிள்ளத்தம்பி, சிவலிங்கம், துரைராசா, திருமதிகள் இரஞ்சிதமலர், சரஸ்வதி, நேசமலர், விமலாதேவி, செல்விகள் இன்பமலர், அரியமலர் என்போரின் அருமைத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்றுமாலை நடைபெற்றன என்பதை அறியத்தருகிறோம். 3359

ரணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜவாஜி — ஜெயலலிதா முத்துராமன் - நாகேஷ் நடித்த
சவாலே சமாளி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம் ஜி. ஆர். — ஜெயலலிதா நடித்த
தேடிவந்த மாப்பிள்ளை

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். (இருவேடங்களில்)
ஜெயலலிதா
அசோகன்
நடித்த
நீரும் நெருப்பும்
(சஸ்மிமன் கலர்)

இரு தினங்கள் மட்டும்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 2-30, 6-30, 10-00 சனி, ஞாயிறு: 10-30
ஏ. வி. எம். ராஜன் - சாரதா
காஞ்சனா
நடித்த
துலாபாரம்

இரு தினங்கள் மட்டும்
லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி: காலை 10-00 பி.ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30
★ சமிகபூர் ★ சர்மிலாதாகூர்
நடித்த
அன் ஈவினிங் இன் பரிஸ்
(ஈஸ்மன் கலர்)

யாழ். ரஸிகர்களுக்கு சினிமாஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரின் பொங்கல் விருந்து!
14-1-72 முதல்
வெலிங்டன் - லிடோ
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - பத்மினி - நாகேஷ்
நடித்த
சிவாஜி புரடக்ஷன்ஸ்
வியட்நாம் வீடு
கதை வசனம்: சுந்தரம் இசை: கே.வி. மகாதேவன் டைரக்ஷன்: பி. மாதவன்

நாகம்ஸ் சினிமா
கல்லூரம்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30.
ஆதித்தன்-K R. விஜயா
நாகேஷ்
நடித்த
தாயும் மகளும்

MANOHARA
(Jaffna)
Daily 4 Shows
Rodert Hunter
in
RAMON THE MEXICAN

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p.m.
Sat. Sund ys 10-30
Hary Andrews
Michael Caine
in
BATTLE OF BRITAIN
(color)

தினசரி 2-00, இரவு 10-00
ஜெமினி- வைஜந்திமாலா
ரவிராவ்
நடித்த
பார்த்திபன் கனவு

மானிப்பாய் பட்டினசபை
கேள்வி விளம்பரம்

மானிப்பாய் பட்டினசபைத் தலைவராகிய நான் வேலைஞர்களான 'முத்திரிக்கை' இட்ட கேள்விகள் இடு பிரதிகளில் 26-1-72ல் மு. ப. 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

வேலைகள்	பிணைப் பணம்	பத்திரம் பணம்
1. நகரமண்டபம் நிர்மாணித்தல்	100/-	10/-
2. யாழ்சாலை ஒழுங்கை அரச நன்கொடை	25/-	5/-

கேள்விக் இச்சபையால் மேற்கண்ட வேலைகள் செலுத்திபதன் பேரில் வழங்கப்படும். உத்தியோகபூர்வமான பத்திரங்களிலேயே சமர்ப்பிக்கவேண்டும். அவை பெறுவதற்கான இறுதித் திகதி 24-1-72 நண்பகல் 12-00 வரையாகும்.

நகரமண்டபம் நிர்மாணித்தல் வேலைக்கு அரசாங்கத்தில் அல்லது உள்ளூராட்சி மன்றமொன்றில் ரூபா 50 000/- மேலுள்ள வேலைகளைப் பதித்தவர்கள், பதிவு அத்தாட்சி சமர்ப்பித்தால் மாத்திரம் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

ஏனைய விபரங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

தலைவர்,
பட்டினசபை, மானிப்பாய்.

ப.ச. சண்முகலிங்கம்,
மானிப்பாய், 8-1-72. 3370

ஆசிரியருக்குக் கடிதம்

சமய நூல்கள்
வருவிக்கவும் தடையா?

நான் வெளிநாட்டுச்செலாவணி கட்டுப்பாட்டு அதிகாரிக்கு 30-9-71ல் இந்தியன் ரூபா 13 'வைதீக தர்மவர்த்தினி' என்றும் சமய சம்பந்த மாதசஞ்சிகை இருவருடச் சந்தா புதுப்பித்தலுக்கு அனுமதிகோரி அனுப்பினேன். அக்கடிதத்துடன் வைதீக தர்மவர்த்தினி பத்திராதிபரின் சந்தா புதுப்பித்தல் பற்றிய கோரிக்கையையும் எனது சந்தா இலக்கமும் முகவரியுமுள்ள அவர்களின் சஞ்சிகை அனுப்பிய உறையையும், நான் உண்மையுள்ள சந்தாக்காரன் என்பதை நிரூபிப்பதற்காக அனுப்பியிருந்தேன். அதற்கு 6-1-72ல் எனக்கு கிடைக்கப்பெற்ற பதில் கடிதத்தில் இயற்றிற்கு வெளிநாட்டு செலாவணி தரமுடியாததுபற்றி வருந்துவதாக அறிவித்தனர்கள்.

சமய சம்பந்தமான ஞான சம்பந்தம், குமாரகுருபரன் வைதீகதர்மவர்த்தினி, ஸ்ரீ காமகோடி பிரதீபம் திருக்கோணேசர் சித்தாந்தம் சனாதனசாரதி சஞ்சிகைகளுக்கு சந்தா வாரர் ஆகிய நான் ஒரு தனிப்பட்டதபர் என்ற முறையில் எமது சந்தா புதுப்பிப்பதற்கு தடை விதிப்பது எமது சமயவாசகங்களை அடிப்படை உரிமையையும் சுதந்திரத்தையும் சுதந்திரநாடு என்வர்களிக்கும் எமது அரசாங்கம் மறுப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். இந்தத் தடை எமது சமயத்திற்கே தடைவிதித்தது போலிருக்கிறது. மேற்குறித்த சஞ்சிகைகளை தருவிப்பதற்கு இலங்கையில் ஏசண்டுகள் இன்று இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தாலும் அவர்களுக்கு நாம் ஏன் கறுப்புப்பணம் கொடுத்து பெற வேண்டும்? இந்த நூல்களை நாம் பெற அரசாங்கம் வழி செய்யுமா?

செ. குமாரசாமி
சமய வாசகப் பிரியன்
கந்தரோடை

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, இரவு 10-00
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - தேவிகா
நடித்த
நீலவானம்

வெல்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - வைஜந்திமாலா
நடித்த
வஞ்சிக்கோட்டை வாலிபன்

சாந்தி
(சங்கானை)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—சாவித்திரி
நடித்த
பிராப்தம்

யாழ். தியேட்டர்
(வண்ணார்பண்ணை)
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சாவித்திரி
நடித்த
பாசமலர்

சீன மந்திரி காலமானார்

ஹாங்காங், ஜன. 11

சீன வெளிஉறவு அமைச்சர் மார்ஷல் சென்யி காலமானார் என்ற செய்தியை பீகிங் அறிவித்துள்ளது.

சென்யிக்கு வயது 71. நீற்றுநோயின் காரணமாக அவர் மரணமானதாக அறிவிக்கப்பட்டது. மரணச்சடங்குகளில் சீனத் தலைவர் மாஓசேதுங் பிரதமர் சூ என் லாய ஆகியவர்களும் கலந்து கொண்டனர்.

சீனாவில் இடம்பெற்ற கலாச்சாரப்புரட்சியின் போது சென்யி பெரிதும் குற்றச்சாட்டுகளுக்குள்ளானார்.

அமைச்சருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், புதன்

பொது நிர்வாக உள்ளூராட்சி உடநாட்டு அமைச்சர் திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா விற்கு யாழ்ப்பாணம் மாநகரசபை இம்மாதம் 15-ம் திகதி காலை 9 மணிக்கு நகர மண்டபத்தில் பொது வரவேற்பு அளிக்கும் என மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தெரிவித்தார்.

நியுயோர்க், ஜன. 11

முன்னாள் உபஜனாதிபதி திரு ஹியுபோர்ட் ஹம்ப்ரி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராகப்போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். இந்தோசீனாவில் போரை நிறுத்தி அமைதியைத் தோற்றுவிப்பதுதான் தனது முக்கிய பிரசாரமாக விருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

"பாகிஸ்தானுடன் இணைப்பு எதுவும் இருக்காது

சுதந்திரநாடாகவே எப்பொழுதும் பங்ளாதேஷ் விளங்கும்"

டாக்கா கூட்டத்தில் முஜிபுர் ரஹ்மான் விளக்கம்

டாக்கா ஜன 11

பங்ளாதேஷ் இனி எப்பொழுதுமே சுதந்திர நாடாகவே இருந்துவரும் என்று அந்தநாட்டின் ஜனாதிபதி ஷேக் முஜிபுர் ரஹ்மான் நேற்றுக் கூறினார்.

பாகிஸ்தானுடன் எந்தவித இணைப்பையும் வைத்துக்கொள்ளப்போவதில்லையென்றும் ஷேக் கூறினார்.

9 மாத சிறைக்குப் பின்னர் தாயகம் திரும்பிய ஷேகை பங்ளாதேஷ் மக்கள் உணர்ச்சிப்பிரவாகத்துடன் நேற்று வரவேற்றார்கள். விண்ணைமுட்டும் மகிழ்ச்சி ஆரவாரங்களுடன் மக்கள் தமது தலைவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

ஊர்வலம் டாக்காரேஸ் கோர்ஸ் மைதானத்தைச் சென்றடைவதற்கு இரண்டு மணிநேரத்துக்குமேல் பிடித்தது. உணர்ச்சிவசப்பட்ட மக்கள் ஷேகை நெருங்கி வராமல் முக்திபௌஜ் வீரர்கள் அவரைச் சுற்றிப் பாதுகாப்பாக நின்று அழைத்துச் சென்றனர். நகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் மக்கள் மகிழ்ச்சியினால் கதறியும் அழுதார்கள்.

பொதுக் கூட்டத்தில் அவர் பேசியபோது பாகிஸ்தானுடன் எதுவித இணைப்பையும் வைத்துக்கொள்ளப் போவதில்லை என்றார். பங்ளாதேஷ் எல்லாரையும்

(4-ம் பக்கம் பார்க்க)

குடும்பத்துடன் இணைந்த காட்சி

ஷேக் முஜிபுர் ரஹ்மான் நேற்று டாக்காவிலுள்ள தமது தன்மண்டி இல்லத்தில் குடும்பத்தாருடன் இணைந்தகாட்சி நெஞ்சை கவரும்வகையாய் இருந்தது.

ஷேக் வீட்டுக்குள் புகுந்ததும் பேரநாளமாக ஸ்தம்பித்து நின்றுவிட்டார். வீட்டிலிருந்தவர்களும் வாய்மூடி மௌனியாகினார்கள். தாரை தாரையாக எல்லோர் கண்களிலிருந்தும் பெருகியோடிய ஆனந்தக் கண்ணீர் மூலமே அவர்கள் பேசிக் கொண்டனர். ஷேக் முதலில் தமது வயதான பெற்றோர்களின் காலடிகளைத் தொட்டு மரியாதை செலுத்தினார். அங்கு குழுமியிருந்த பெண்கள் மலர் இதழ்களை அவர்மீது தூவினார்கள்.

கெய்ரோ மாநாடு

பாக். - லிபியா பகிஷ்கரிப்பு

கெய்ரோவில் நேற்று ஆரம்பமான ஆபிரிக்க ஆஸிய ஒற்றுமை மாநாட்டை பாகிஸ்தானும் லிபியாவும் நேற்று பகிஷ்கரம் செய்தன. இந்த மாநாட்டில் பார்வையாளர்களாக கலந்து கொள்ள பங்ளாதேஷ் தூதுக்குழு அனுமதிக்கப்பட்டதை ஆட்சேபித்தே இந்தப் பகிஷ்கரம் நடைபெற்றது.

இந்த மாநாட்டுக்கு இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி அனுப்பிய நல்லெண்ணச் செய்தியொன்றில் பங்ளாதேஷ் உருவாகியுள்ள உண்மை நிலையை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்று கோரியுள்ளார். விரைவில் விடுதலையாகவிருக்கும் ஆபிரிக்க நாடுகள் இதற்கு ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த மாநாட்டில் இந்தியாவின் சார்பில் கலந்து கொள்ளும் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் எம். பி. தேசிய விடுதலை, மனிதகுல விடுதலை ஆகியவற்றை ஆதரிப்போர் அனைவரும் பங்ளாதேஷ் அரசை அங்கீகரித்தாக வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

விரைவில் பிரி. அங்கிகாரம்

பங்ளாதேஷ் அரசை பிரிட்டிஷ் இன்னும் சில வாரங்களில் அங்கீகரிக்கக்கூடும் என்றும், அந்த முறையில் அது காரியங்களைச் செய்து வருகின்றது என்றும் லண்டனில் அவதானிகள் கூறினார்கள். இந்தக் கருத்துப்பட "விபரக்" பத்திரிகையான கார்டியனும் ஒரு செய்திவெளிப் பிரசுரித்துள்ளது.

காயமுற்ற கைதிகள் பரிமாற்றம்

காஷ்மீர் வாக்கெடுப்பு

ஜம்மூகாஷ்மீரில் விரைவில் மக்கள் கருத்தை அறிவதற்கான வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று அங்குள்ள விடுதலைக் குழுவினர் தமது சமீபத்திய கூட்டமொன்றில் கேட்டுக் கொண்டதாக பாகிஸ்தான் வானொலி ஒரு செய்தியை இன்று ஒலிபரப்பிய

இந்திய-பாகிஸ்தான் போரில் மேற்கொண்ட காயமடைந்துள்ள கைதிகளைப் பரிமாறிக் கொள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் இணங்கியுள்ளன. இதற்கான ஏற்பாட்டை உலக செஞ்சிலுவைச் சங்கம் செய்துள்ளது. இந்தப் பரிமாற்றம் விரைவில் இடம் பெறவிருக்கின்றது.

இந்தியர் வசமுள்ள பாகிஸ்தான் கைதிகளை இந்தியர்கள் பராமரிக்கும் விதம் மிகச்சிறப்பாகவிருக்கின்றது என ஜெனிவாவிலுள்ள செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

"தோல்விஏற்பட்டதை எதிர் கொள்வோம்"

கடந்த போரில் பாகிஸ்தானுக்கு தோல்வி ஏற்பட்டதையும் கிழக்கு அரங்கில் பாகிஸ்தான் படைகள் சரணடைந்ததையும் பாகிஸ்தான் மக்கள் எதிர் கொள்ள வேண்டும். என்று பாகிஸ்தான் செய்தித்துறை அமைச்சர் ஜனாப் ஜி. எச். பீர்சாதா தெரிவித்ததாக இந்திய வானொலி இன்று செய்தியொன்றை ஒலிபரப்பியது.

முன்னைய ஆட்சியாளர்கள் பாகிஸ்தான் மக்களிடம் பெரும் பொய்களையே கூறி வந்திருக்கிறார்கள் என்று அவர் கூறியதாகவும், உடனடியான பத்திரிகைத் தணிக்கை இருந்ததால் மக்கள் ஒன்றையும் தெரிந்து கொள்ள முடியவில்லையென்றும் அவர் தெரிவித்ததாக வானொலி கூறியது.

கிழக்குப் பாகிஸ்தான் வீழ்ச்சியடையும் சமயத்திற்கூட பாகிஸ்தான் படைகள் எல்லா முனைகளிலும் முன்னேறுவதாக அறிவிக்கப்பட்டதென்றும் அடுத்த நாளில் வெளிவந்த செய்திகள் பாகிஸ்தான் மக்களை நிலை குலையச் செய்து விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி பூட்டோவின் தலைமையிலான ஆட்சி பதவிக்கு வந்திருப்பதிலுள்ளதான் உள்நாட்டுக் கலகம் ஏற்படுவது தவிர்க்கப் பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு சஞ்சிகைகள், பத்திரிகைகளுக்கு ஜெனரல் யாஹ்யாகான் அரசு விதித்திருந்த தடைகளையும் அவர் ரத்து செய்துள்ளார்.

யு. எஸ். 7-வது கடற்படை வெளியேற்றம்

நியூயோர்க் 11

இந்துமாக்கடலில் நிலைகொண்டிருந்த அமெரிக்க அணுஆயுத விமானந்தாங்கிக் கப்பல் எண்டபிரைஸ் தலைமையிலான 7வது கடற்படையணி அங்கிருந்து விலகிச் சென்றதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான்- இந்திய போரின்போது இந்துமாக்கடல் பிரதேசத்துக்குள் நுழைந்த இந்தக்கடற்படை நேற்று இங்கிருந்து புறப்பட்டது. சண்டை உச்சக் கட்டத்திலிருந்த சமயம் இந்த அணி இங்கு அனுப்பப்பட்டது. கிழக்குகரங்கில் வெற்றி பெற்றுக் கொண்டிருந்த இந்தியப்படைகளைப் பயமுறுத்த அன்று சண்டையில் நேரடியாகக்கலந்து கொள்ளும்படியாக இந்த கடற்படை அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என அப்போது கருதப்பட்டது. அதன் கிழக்கு வங்காளத்திலிருந்த அமெரிக்கப் பிரவாணிகளை அப்புறப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிகார வட்டாரங்கள் ஒருகட்டத்தில் அனையையே கூறின. இரண்டுடொருகிளாஇங்கு அனுப்பியிருப்பது எங்களை அனுப்பி அமெரிக்க பிரஜைகளை வெறும் பயமுறுத்தத்தான் ஆகக்கூடிய வசதியிருக்கையில் என்று இந்திய அதிகாரிகள்

[4-ம் பக்கம் பார்க்க]



தம்பர் மாஸ்டர் ஞாபகார்த்த விழா

யாழ்ப்பாணம், புகழ் தம்பர் மாஸ்டர் ஞாபகார்த்தநிழாவை பெப்ரவரி மாதம் 18-ம் 19ம் தேதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்தவதென தம்பர் ஞாபகார்த்த விழா கமிட்டி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கமிட்டித்தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கீழ்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன

பெப்ரவரி18-ம்தேதி யாழ் மத்தியகல்லூரியில் விழா ஆரம்பமாகும் கல்லூரியில் தம்பர் மாஸ்டரின் படம் திரை நீக்கம் செய்துவைக்கப்படும். அதன் பின்னர் கல்லூரியில் விசேஷகூட்டம் நடைபெறும்.

பெப்ரவரி 19-ம் தேதி காலை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் 'புதிய கல்வி திட்டமும், ஆசிரியர் கடமையும் என்ற பொருள் பற்றி கல்விக் கருத்தரங்கு நடைபெறும் கல்விமா அதிபதி டாக்டர் பிரேமதாசா உடமை, உதவி கல்விமா அதிபதி திரு. ரஞ்சித்தமேரு, மற்றும் பிரபல அறிஞர்கள் கலந்துகொள்வார்கள்.

வடமாரண ஆசிரியர் சங்கமும் வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கமும், துக்கருத்தரங்கை ஒழுங்கு செய்து வருகின்றன.

யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் அன்றுமாலை தம்பர் ஞாபகார்த்தவிழா கமிட்டி தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்தில் தம்பர் ஞாபகார்த்த மலர் வெளியிடப்படும், இரண்டு ரூபா வீதம் விற்பனை செய்யப்படும் இம் மலரின் வருமானம் தரமுள்ள ஒரு மாணவனின் கல்விக்கு உபகாரச்சம்பளமாக வழங்கப்படும்.

அன்றைய தினம், பல அறிஞர்களின் கட்டுரைகளுடன் 'ஈழநாடு' விசேஷமலர் ஒன்று வெளியிடவிருக்கிறது.

.....

கல்விப்பகுதி செய்

திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் முதலாம் வகுப்பு வைக்கப்படவேண்டுமென்று கல்வி இலாகாவைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை வேற்றூர் ஆசிரியர் சங்கம் நிறைவேற்றி வடமாநில கல்வி அதிபருக்கு அனுப்பியுள்ளது.

இன்றைய பலன்

மேஷம்- பெருமையுடன் தன்னிமிர்ந்து வாழுவீர்கள். பிறரவழித் தனமும் சேரும். தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும்

ரிஷபம்- இருப்பிட மாற்றத்திற்கான ஆலோசனைகளும் உருவாகும் அரசினர் ஆதரவும் கிடைப்பதற்கு இடமுண்டு

மிதுனம்- இன்று அதிக அதாயம் கிடைக்கும். புதுத் தொழிற்துறைகளை மனம் நாடும், நீண்ட பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்

கடகம்- துன்பத்தின் காயம் மனதிலே படியும், சிலர் உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்வார்கள்

சிம்மம்- சிறுசிறிய விபத்திற்குக்கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும். மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடும் இடம் பெறும்

கன்னி- திடீர் வரவுகளுக்கும் இடமுண்டு. பேச்சு வன்மையின் மூலம் பலரிடம் இடந்த ஆதரவைத் தேடிக் கொள்வீர்கள்

துலாம்- சகோதரி ஒருவரின் பிரச்னை மனதுக்கு வேதனையைத் தரும். உங்கள் வீட்டிலேயே உபத்திரவங்கள் உருவாகும்

விருச்சிகம்- வசதிகள் பெருகும், வரவிலும் திருப்தி ஏற்படும் செலவுகளும் பெருகும்.

தனுசு- நீண்டநாள் நண்பர் ஒருவரை ஒருவர் மீண்டும் சந்திப்பீர்கள், கணவன் மனைவி உறவுமுறையும் நெருக்கமாக இருக்கும்

மகரம்- பூமிப்பிணக்குகளால் வலை தோன்றக்கூடும், தொழில் புரிவிடத்தில் குழப்பங்கள் உருவாகும். பொறுமை நன்று

கும்பம்- குடும்பப் பிரச்னைகள் சுமுகமான நிலை தென்படும். கற்றோடலிலும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெறுகும்

மீனம்- இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் தெய்வ வழிபாடு விநோதமாகத்தரும்

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

சேவை நீடிப்பு

பருத்தித்துறை, செவ்வெல்லிபடி மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. க. செந்தம்பரம், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. எஸ் சிவபாதசுந்தரம், மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு எஸ். முத்துவேற்பிள்ளை ஆகியோரின் சேவை விசேட காரணங்களுக்காக ஆறுமாத காலம் நீடிக்கப்பட்டுள்ளது

கடந்தாண்டு இறுதியுடன் இளைப்பாறிய பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் உயர் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி எஸ். ஆறுமுகம் இம்மாதம் சாம்பியா செல்கிறார்.

—

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(12-1-72) புதன்

(செய்திகள்: காலை 6-30, மதம் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அலை 59 மீ காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 வாலவதிசித்தலிங்கம்மா அப்பாக் குட்டி. 6-25 இஸ்லாமிய தத்வித்தனை. 6-50 பண்ணைச்செய்திகள், 7-05 துதிப்பாடல், 7-30 குரல்வளை 8 00 இசைவேளை விஜயலக்ஷ்மி குமாரசாமி, 8-15 இஸ்லாமிய கீதம்

இரவு 6-15 கதிரோலிக்க நிகழ்ச்சி சஸ். பிதா. டொமினிக் சுவாமிநாதன், 6-30 பாடு எஸ். எம். இரத்தினம் பிள்ளை, 7-00 சண்ணகி காவியம், 7-15 திருக்குறள் அமுதம் (14) புலவர் பாண்டியனார், 7-30 வெளி நாட்டுச்செய்திகள், 7-35 மெல்லிசைப் பாடல்கள் பாடுபவர்: ஏ. எம், வி. ராஜா, 7 45 நாடகம் 'உணர்வு பிறந்தது' எழுதியவர்: பொன். பொன்னர் சுதாவிப்பு: கே. எம் வாசகர் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைவல்லுனர்: ஏ. பாலகிருஷ்ணன்

"அன்பினால் சிறந்த நிர்வாகத்தை நடத்தலாம்"

குருநகர். செவ்.

அன்பினால் எதையும் ஆக்கக் கூடிய மிகவழகிதான தாகும். சிறந்த நிர்வாகத்தை நடத்த வேண்டுமானாலும்சரி, ஊழலில்லாத நிர்வாகத்தை நடத்தவேண்டுமானாலும்சரி அன்பினாலும் நடத்த முடியும். தனக்குக்கீழே உள்ள ஊழியர்களை அன்போடும், பண்போடும் நடத்தி வந்தால் எந்த அதிகாரியும் தனது நிர்வாகத்தை சீராகவும் சிறப்பாகவும் நடத்த முடியும்

இவ்வாறு நேற்று மாலை நமக்கழிக்கப்பட்ட பிரிவுபசார தேநீர் விருந்து வைபவத்தில் உரையாற்றிய யாழ் மாநகர பிரதம மின் பொறியியலாளர் திரு. பசில் குணவர்த்தனா குறிப்பிட்டார்.

கடந்த மூன்றரவருடங்களாக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி இம் மாத முதல் மாத்தறைக்கு மாற்றலாகிச் செல்லும் யாழ் மாநகர பிரதம மின் பொறியியலாளர் திரு பசில் குணவர்த்தனாவுக்கு மின்சாரப் பகுதி ஊழியர்களால் திரு வி திருநாவுக்கரசு தலைமையில் நடத்தப்பட்ட இவ் விருந்துபசாரவைபவத்தில் திரு குணவர்த்தனா தொடர்ந்து பேசுகையில் தமிழ் மொழி தெரியாதவனாக நான் இங்கு வந்து கடமையாற்றி யபோதும், எனது நிர்வாகத்தில் எதுவித குறையும் இல்லாது சிறந்த சேவையை நடத்த இப் பகுதி தொழிலாளர்கள் எனக்கு ஒத்துழைப்புக் கொடுத்ததை மறக்க முடியாது. எனது இளைய ஊழியர் ஒவ்வொருவரையும் நான்எனதுகுடும்பத்தில் ஒருவராகவே மதித்து சகோதர மனப்பான்மையுடன் நடத்தி வந்துள்ளேன். எனது சமைநிர்வாகத்தில் பலதரப்பட்ட கோணமுடையவர்கள் கூட்டியில் இருந்தபோதும் எனது நிர்வாகத்தை நான் நேர்மையாகவும் சரியாகவும் நடத்தியிருக்கிறேன்; இதற்கு எனக்கு ஒத்துழைப்பு நல்கிய எனது சக ஊழியர்களுக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருக்கின்றேன் என்றார்

மின்மாநாரி திரு கே நவரத்தினம் மாநகர ஆணையாளர் திரு ஏ நி கதரம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

—

"பாரபட்சம் காட்டாதீர்"

கொழும்பு, செவ்

சமயாசமய எழுதுவினைஞர்களுக்கு தற்காலிக நியமனம் வழங்கப்படும்போது கையாளப்படும் முறையையே சமயாசமய தட்டெழுத்தாளர்களாகிய தமிழ், சிங்கள, ஆங்கிலதட்டெழுத்தாளர் விஷயத்திலும் கையாளும்படி அரசாங்க தமிழ்த்தட்டெழுத்தாளர் சங்கம் பொதுநிர்வாக சேவை ஆணைக்குழுவிடம் நிரந்தரக் காரியதரிசியைக் கேட்டுள்ளது.

சமயாசமய தட்டெழுத்தாளர் சேவையிலுள்ள ஊழியர்களுக்குத் தகுதிகாண் பரீட்சையைத்து அதன் மூலம் தற்காலிக நியமனம் வழங்கப்படுவதாயும் திருப்திகரமான சேவையை ஆவிந்தவரும் இவர்களில் குறைந்த தொகையினரே தற்காலிக நியமனத்திற்குத் தெரிவுசெய்யப்படுவதாகவும் ஆனால் இணைந்த சேவைக்குட்படுத்தப் பட்ட சமயாசமய எழுதுவினைஞர்கள் சேவையிலுள்ள ஊழியர்களுக்கு எவ்வித தகுதிகாண்பரீட்சையுமின்றி தற்காலிக நியமனம் வழங்கப்படுவதாகவும் இது ஒரே இணைந்த சேவையிலுள்ள ஒருபகுதியினரான சமயாசமய தட்டெழுத்தாளர்களின் முன்னேற்றத்தைப் பாதிப்பதாயுள்ளதாயும் நிரந்தரச் சேவையாளருக்குச் சமம் கட்டிக்காப்பதியுள்ளது.

யு: எஸ்: ..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கருதினார்கள். "எண்டபிரைஸ்" கப்பலுடன் வேறு பல நாசகாரிகள், சண்டைக் கப்பல்கள், நீரிலும் நிலத்திலும் பாய்ந்து செல்லும் போர்க்கருவிகள் போன்ற பல தவிர்க்க வேண்டிய கொண்டதாக இந்தக் கடற்படையணி விளங்குகிறது விமானம் தாங்கிகளுடன் முகாமிட்டிருந்த இவை நிக்சன் நிர்வாகத்தின் உத்தரவின் பேரில் இந்த மாக்கடலுக்குப் புறப்பட்டு வந்தன. போரின்போது கிழக்குப் பாகிஸ்தானில் மாட்டிக் கொண்ட பாகிஸ்தான்படைகள் எந்த வகையிலாவது பெரும் எண்ணிக்கையில் தப்பி விட்டால் துறைமுகப் பகுதிக்கு வந்திருந்தால் இந்தக் கடற்படை அணி அவர்கள் பத்திரமாகத் தப்பிச் செல்வதற்கு உதவும் நோக்கத்துடனேயே இப்பகுதிக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்ற சில அவதானிகள் இப்போது கருதுகிறார்கள். தனதுகடற்படை சக்தியைக் காட்டி இந்தியாவைப் பணிமுறுத்தும் நோக்கமும் அமெரிக்காவுக்கு இல்லாதிருந்திருக்க முடியாது என்றும் அவர்கள் கொள்கிறார்கள்.

இந்துமாக் கடலில் நிலைகொண்டிருந்த இக்கடற்படையணி இப் பொழுது தென்சீனக் கடலுக்கு சென்றுவிடலாம்.

—

பாகிஸ்தானுடன்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் சுதந்திரநாடாகவே இருக்கும் என்றார். சட்டத்தையும் ஒழுங்கையும் மக்கள் தம்கைகளில் எடுத்துக் கொண்டுவிடக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தியாவும் பிரதமர் இந்திராகாந்தியும் அளித்த உதவிகளுக்காக அவர் நன்றி கூறினார். காங்கள் கோரும் வரையில் இந்தியப்படைகள் பங்களாதேஷில் தங்கியிருக்கும் என்றும் அவர் சொன்னார்.

சோவியத் யூனியன், போலந்து போன்ற நாடுகளும் அமெரிக்க மக்களும் அளித்த உதவிகளுக்காகவும் அவர் நன்றிதெரிவித்தார்.

உலக நாடுகள் விரைவில் பங்களாதேஷை அங்கீகரிக்க வேண்டும் என்றும் ஷேக் வேண்டுகோள் விடுத்தார்.

குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய
குளிர்மையான
மறுமலர்ச்சி
மெட்டஹோரன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

1971-ல் 560 வீதி விபத்து!

வடபகுதியில் மட்டும்

யாழ்ப்பாணம், புதன்

1971ம் ஆண்டில் வடபகுதியில் மட்டும் 560 விபத்துக்கள் நடைபெற்றுள்ளதாக பொலிஸ் அதிபர் திரு ஆர். சந்தரலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் 33 விபத்து மரணம் நிகழ்ந்துள்ளதாகவும், இதில் 7 மரணங்கள் இ.போ.ச விபத்துக்களால் ஏற்பட்டனவென்றும் அந்த அறிக்கை கூறுகிறது. 560 விபத்துக்களில் 92 விபத்துக்கள் இ. போ.ச. பஸ்களால் ஏற்பட்டுள்ளனவென்றும் சாரதிகளின் கவலையீனத்தினாலேயே இவ்விபத்துக்கள் நேர்ந்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கே. கே. எல். வீதி, யாழ் பருத்தித்துறை வீதி, யாழ் கண்டிவீதி ஆகிய வீதிகளிலேயே அதிகமான விபத்துக்கள் நடைபெற்றதாகவும், சாரதிகளின் கவலையீனத்தினாலும் அதிவேகத்தினாலும், அனுபவக் குறைவினாலுமே அதிகமாக விபத்து நடைபெறுகின்றன என்றும், இவ்விதம் விபத்துக்கள் ஏற்படக்கூடிய தாக மோட்டார் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் பொலிஸ் அதிபர் கூறினார்.

இ.போ.ச. சாரதிகள் கவலையீனமாக பஸ்களைச் செலுத்தி அடிக்கடி விபத்துக்களை ஏற்படுத்துவதாக பொலிஸ் அதிபர் வலியுறுத்தி கூறினார். விபத்துக்களுக்கு காரணமாயிருக்கும் சாரதிகள் மீது நீதிமன்றம்மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகக்கூறிய பொலிஸ் அதிபர், விபத்துக்களை ஏற்படுத்தும் சாரதிகளின் லைசென்ஸ்கள் ரத்துச்செய்யப்படவிருப்பதாகவும் கூறினார்.

றிமாண்டில்

விபத்து மரணங்களுக்கு காரணமாயிருக்கும் சாரதிகள் விசாரணை முடியும்வரை றிமாண்டில் வைக்கப்படுவர் என்றும், இப்போது பிணையில் விடுவிக்கப்படுவது போன்று இனிமேல் நடைபெறமாட்டாது என்றும் அவர் கூறினார்.

இ.போ.ச. சாரதிகளுக்கு எச்சரிக்கை

இ.போ.ச. சாரதிகளிடி ஒழுங்குமுறைகளைமீறி கவலையீனமாக நடப்பதாகவும், இவற்றைமீறும் சாரதிகள் மீது பொலிஸார்கடும் கண்காணிப்பு செலுத்தி கடும் நடவடிக்கை எடுப்பர் என்றும் பொலிஸ் அதிபர் எச்சரிக்கை விடுத்தார்.

வீதி ஒழுங்குமுறைகள் பற்றி இ.போ.ச. சாரதிகள், டாக்ஸி சாரதிகள், பயிற்சி பெறும் சாரதிகள் ஆகியோருக்கு விளக்கம் கொடுக்கப்படவிருப்பதாகக் கூறிய பொலிஸ் அதிபர், பாதசாரிகளுக்கும் குறிப்பாக மாணவர்களுக்கு பொதுவிடங்களில் வைத்து வீதிஒழுங்கு பற்றி விளக்கவிருப்பதாகவும் சொன்னார்.

மின்சார சீர்கேடு பற்றி அமைச்சர்களுக்கு தந்தி

யாழ்ப்பாணம், புதன்

முன்னறிவித்தலின்றி மின்சாரசபையினர் மின்சாரத்தை துண்டித்திருப்பதால் வலியிறுப்பாளர்கள் மாநாடு நடாத்தவை குறை கூறுகிறார்கள். இது மாநாடு நடைபெறும் நேரமல்ல. மின்சாரசபை தான் இதற்கு பொறுப்பு. உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

யாழ்ப்பாணத்திலுள்ள மின்சார சீர்கேடு பற்றி யாழ் மேயர் திரு அல்பிரட்துரையப்பா 3 அமைச்சர்களுக்கு நேற்று அனுப்பிய தந்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மின்சார அமைச்சர் திரு. அமிர்தநிர்பால சேனநாயகா, பொதுநிர்வாக கூட்டுராட்சி உள்நாட்டு அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, நகரவிருத்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் ஆகியோருக்கு இந்த தந்தி அனுப்பப்பட்டுள்ளது.

அந்தந்தவீதி மேலும் கூறப்பட்டிருப்பதாவது: கடந்த 7 தினங்களாக யாழ் நகர் அடிக்கடி இருளில் மூழ்கிறது. மின்சாரம் கண்டபடி துண்டிக்கப்படுகிறது இது மின்சார இலாகாவின் பொறுப்பு. நடவடிக்கை எடுக்கவும்.

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் வழங்குதல்

மாணவர்களுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள், வர்த்தகர் கல்வி உத்தியோகத்தர்கள் மூலமாக பாடசாலைகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது பாடசாலைகளுக்குத் தேவைப்படும் அப்பியாசப் புத்தகங்களின் பட்டியல்களை இதுவரை அனுப்பி வைக்காத பாடசாலைத்தலைவர்கள், அப்பட்டியல்களை வர்த்தகர் கல்வி உத்தியோகத்தர்கள் மூலம் உடனடியாக இக்கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். அப்பியாசப் புத்தகப்பட்டியல்களை ஏற்கனவே அனுப்பி வைத்த பாடசாலை தலைவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதுவரை அப்பியாசப் புத்தகங்கள் கிடைக்கப்பெறாத பாடசாலைத் தலைவர்கள், இதுசம்பந்தமாக தமது வர்த்தகர் கல்வி உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

தங்களுக்குத் தேவையான 40 மற்றும் 80 பக்கங்கள் கொண்ட அப்பியாசப் புத்தகங்களின் எத்தனை கோட்டிகளும் 40 பக்கங்கள் ஒன்று 18 சதமாகவும் 80 பக்கங்கள் ஒன்று 34 சதமாகவும் பாடசாலை அதிகாரிகளால் மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படும் என்பதை மாணவர்களும் மற்றும் பெற்றோர்களும் தயவுசெய்து கவனிக்கவும்.

பெரும்பான்மையான வர்த்தகர் கல்வி உத்தியோகத்தர்களுக்கு, அவர்கள் கேட்டுக்கொண்டதன்படி அப்பியாசப் புத்தகப் பொதிகள் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

1972 ஜனவரி 15ம் திகதிக்கு முன்பு அப்பியாசப் புத்தகங்கள் ஒப்படைக்கும் சகல வேலைகளும் பூர்த்தியாகும்.

அப்பியாசப் புத்தகங்கள் கடுதாசித் தேவைப்படின், வர்த்தகர் கல்வி உத்தியோகத்தர் மூலம் தங்களது தேவைகள் சம்பந்தமாக மேலதிகப் பட்டியல் ஒன்றை அனுப்பிவைக்குமாறு பாடசாலைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்பு, இதர அப்பியாசப் புத்தக மாவலைவாளர்களின் தேவைகள் 1972 ஜனவரி மாதப் பிற்பகுதியில் வியாபாரிகள் மூலம் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படும்.

இதர மாவலைவாளர்களுக்கு அப்பியாசப்புத்தகங்களை வியாபாரிகள் மூலம் வழங்குவதற்கு முன், மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தும் முகமாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1971 நவம்பர் மாதப் பிற்பகுதிவரை பதினேழு (17) உற்பத்தியாளர்களால் 1971ம் ஆண்டின் பதினொரு மாதங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட அப்பியாசப் புத்தகங்கள் 1971 நவம்பர் 24ம் திகதிவரை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தன. 1971 நவம்பர் மாதம் 24ம் திகதிக்குப் பின் உற்பத்தி செய்யப்பட்ட அப்பியாசப் புத்தகங்களை மட்டுமே பாடசாலைகளுக்கு நேரடியாக வழங்குவதற்காக, இக்கூட்டுத்தாபனம் எடுத்துள்ளது. உற்பத்தி புள்ளிவிபரப்படி, அப்பியாசப் புத்தகங்களின் கையிருப்புகள் 1971 நவம்பர் மாத இறுதிவரை எழுதுகருவி விற்பனையாளர்களிடம் இருந்தன. உள்ளூர் எழுதுகருவி விற்பனையாளர்களின், இதுசம்பந்தமான, பதிவேடுகள் அறிவித்தலுக்கு இதற்குச் சான்றாகும்.

1972 பெப்ரவரி மாதம் தொடக்கம் பொது மக்களுக்கு வழங்குவதற்கு போதியளவு அப்பியாசப் புத்தகங்கள் கையிருப்பில் இருக்கும்.

எழுதுகருவி பொருட்களாக மாற்றியமைப்பதற்கு அப்பியாசப் புத்தகங்களை உபயோகப்படுத்தாமல், எங்களுக்கு ஒத்துழைப்பை நல்குமாறு மொனிட்டர்ஸ் அப்பியாசப் புத்தக உற்பத்தியாளர்களையும் மற்றும் இதர எழுதுகருவி பொருட்கள் உற்பத்தியாளர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

556. யூலியன் பிளேஸ்
கொழும்பு—2.
1972 ஜனவரி 8

விசாரணை நடத்துமாறு

1ம் பக்கத் தொடர்ச்சி

மக்கள் கமிட்டிக்கு நியமனங்கள் செய்யப்பட்ட விதம் பற்றி மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்புணர்ச்சியாலும், யாழ். மாநாடு சபை முழுவதும் குறிப்பாக எட்டு வட்டாரங்களுக்கு மக்கள் கமிட்டி இடம்பெறாமை காரணத்தினாலும், மிழ் காணும் காரணங்களாலும் இச்சபை இத்தீர்மானத்தை கொண்டு வந்தது.

நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக காணப்பட்டவர்கள் கிரிமினல் குற்றங்களுக்கு இலக்காகி விசாரணை முடிவடையாத வழக்குகளிற் எதிரிகளாக இருப்பவர்கள் அந்தந்த வட்டாரங்களில் குடியிருக்காதவர்கள், அரசாங்க விரோத நடவடிக்கையில் சம்பந்தப்பட்டதாக பொலிஸாரால் வதை செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டவர்கள், கடுமுறவு சங்க மோசடிகளில் சம்பந்தப்பட்டு விசாரணையில் இருப்பவர்கள், சமூகவிரோத மதுபான கடைகளை நடத்தியதாக குற்றவாளிப்பட்டவர்கள், அரசாங்க ஊழியர்கள், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்டவர்கள், இறந்தவர் ஆகியோர் யாழ்ப்பாண தொகுதியில் நிறவப்பட்ட மக்கள் கமிட்டிகளில் உறுப்பினர்களாகவும் தலைவராகவும் இடம் பெற்றுள்ளதாகவும் அத்தீர்மானத்தில் கட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின்சார சீர்கேடு பற்றி திரு. ஏ. விக்னராஜன் கூறியதாவது: மின்சாரம் சக்தி அனுவாகவிரயோகிக்கவேண்டும். சக்திக்கு மேலாக விரயோகிக்கக் கூடாது. இதன் சீர்கேடுகளை ஒழிப்பதற்காக இரு உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டும். வலியிறுப்பாளர் பெரும் கஷ்டம் அடைந்து வருகிறார்கள். விரைவில் மின்சாரத்தை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருமதி அந்தோனியா சுவாமிநாதர் கூறியதாவது: நாங்கள் பொதுமக்களுக்கு சேவை செய்ய வந்தோம். பொது மக்களின் நெருக்கடி காரணமாக தேவைக்கு அதிகமான மின்சாரத்தை கொடுத்தாக வேண்டிய நிலையில் உள்ளோம். மின்சாரம் கண்டத்திலிருந்து வருகிறது. மின்கம்பிகளை பழுதடைந்து விட்டதால் ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் மின்சாரம் வரக்கூடிய விரிவாக்கம் செய்கின்றோம். மின்னழுத்தம் நாளும் பலவிதத்திலும் பாதிக்கப்பட்டு வருகிறது. இது விரைவில் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

திரு. எஸ். ரி செல்வத்துரை கூறியதாவது: இன்றைய பிரச்சினை மின்சாரம் பிரச்சினை. 30 வருடத்திற்கு முன் உள்ள மின்கம்பிகளை நாங்கள் இன்றும் இழுக்கிறோம். அடிக்கடி கம்பிகளில் மின் பொறி பறக்கிறது. காரணம் கம்பிகள் சரியாக இல்லாததுதான். இலேட்டர் உரிமையாளர்கள் சொந்தமாக ஜெனரேஷன் வைத்திருக்கிறார்கள். இதனால் சமயத்துக்கு நஷ்டம் ஏற்படுகிறது. மின்சாரத் தடையினால் பல தொழில்கள் பாதிக்கப்படுகிறது சீக்கிரம் சீர்செய்யப்பட வேண்டும். மின்சார சீர்கேடுகளை ஒழித்தால் மேயருக்கு வெகு புகழ் கிடைக்கும்.

திரு. தம்பு சந்தரலிங்கம் பேசும் போது, மின்சாரத் தடையினால் வலியிறுப்பாளர் பெரிதும் பாதிக்கப்படுகிறார்களென்று கூறினார்

திரு. மார்க்கண்டு பேசும் போது மக்கள் உறுப்பினர்கள் குறை கூறுகிறார்களென்றும், விரைவில் மின்சாரம் சீராக்கப்படவேண்டும் என்றும் கூறினார்.

வட இலங்கை

சங்கீத சபையின் இசைப் போட்டி முடிவுகள்

[நேற்றைய தொடர்ச்சி]

வீணை: சாதாரண பிரிவு: முதலாம் பகுதி:

யாழ்ப்பாணம்- பிரேமலா இரங்நாதன்.

வாய்ப்பாட்டு: சாதாரண பிரிவு: முதலாம் பகுதி:

யாழ்ப்பாணம்- கமதி முருகேசம்பிள்ளை, நவிராஜ் நடராசா (வாய்ப்பாட்டு - வயலின்), வத்சலா செல்லையா, கிருபாவினி செல்வத்துரை, நிர்மலா நடராஜா, இராசகுமாரி இராசையா, சாந்தினி நாகராசா, அருள்மதி திலம்பரலிங்கம், சிவரஞ்சினி வேலுப்பிள்ளை, ஜீவரஞ்சினி கனகரத்தினம், பகீரதன் அமிர்தலிங்கம் வளஜா ஜீவரஞ்சினி சோமநாதர், சுகந்தி மகேந்திரன், செல்வநாயகி குலசேகரம், கமலா தம்பிராசா, அனிற்றா அலோசியஸ், வசந்தா தாமோதரம்பிள்ளை, சிவசக்தி இராசையா, அனிற்றா தனாயினி மரியாம்பிள்ளை, சுபோஜினி பிரான்சிஸ் சேவியர், ஜீன்மாலா அல்பிறட், லூட்சி மேரி மனுவேற்பிள்ளை, றெஜினி ஜீவொளி அந்தோனிப்பிள்ளை மலரம்பிகை ஆறுமுகம்பிள்ளை, றெஜினா ஆறுமுகம்.

வயலின்: சாதாரணபிரிவு: முதலாம் பகுதி:

தெல்லிப்பழை- மங்கலட்சுமி செல்லையா சிறிதேவி மகாதேவன்; வசந்தினி செகராசசிங்கம்; கங்காதேவி சிவகப்பிரமணியம்.

வாய்ப்பாட்டு: சாதாரண பிரிவு: முதலாம் பகுதி:

தெல்லிப்பழை- ரமிணா வதி சபாரத்தினம்; பரமதயாளினி தங்கவடிவேல்; சாந்தினி இரத்தினம்; சந்திரகுமாரி சபாநாயகம், ஹேமந்தினி பொன்னம்பலம் சரோஜினிதேவி சிவகப்பிரமணியம்; சிவசோதி பொன்னையா; மாலினி சேனாதிராசா; இரவிக்குமார் துரைராசா; நவிஞ்ஞராசாத்தினம்; சுகந்தி சின்னத்தம்பி; சியாமளா திருநாவுக்கரசு; மைதிலி கப்பிரமணியம், சிவானி சிவகப்பிரமணியம், செல்வரமணி செல்லத்துரை; சிவசக்தி சிவப்பிரகாசம்; கலைவாணி தெய்வேந்திரம் கமலாம்பிகை ஆறுமுகம் செல்வராணி நடராஜா; பவதி சபாபதி; தர்மகுலசிங்கம் பொன்னுத்துரை; சாந்தகுமார் காசிப்பிள்ளை. சித்திரஞ்சினி வாணிக்கவாசகர்; ராகினி பரிமளவரதன்; லோகநாயகி துரைசிங்கம்; இந்திரராவேலி சந்தசாமி; தயாநிதி கப்பிரமணியம்; தயாநிதி இளையதம்பி, சபாநாதன் நாகையா, அருள்மொழி வேணுகோபால்.

வாய்ப்பாட்டு: சாதாரண பிரிவு: முதலாம் பகுதி:

பருத்தித்துறை- ஜனககுமாரி ஜயரத்துரை; இராதை ஜனார்த்தனகுரு; வசந்திக்கா முத்துத்தம்பி; ஜெயராணி சின்னத்தம்பி; மாசிலாமணி சேமலிங்கம்; ரஞ்சினி மயில்வாகனம்;

வாய்ப்பாட்டு: சாதாரண பிரிவு: முதலாம் பிரிவு:

பருத்தித்துறை-

சாந்திமதி அருளுசலம்; வாசுகி சந்திரசேகரம்; சித்திராலக்ஷ்மி சேதுநாதன்; தயமலர் சந்தவனம்

வீணை: சாதாரண பிரிவு: முதலாம் பிரிவு:

பருத்தித்துறை: வெனிமனோரி இராசநாயகம்.

வயலின்: சாதாரணபிரிவு: முதலாம் பிரிவு:

பருத்தித்துறை: மனோரி

(6 ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

அழியக்கூடியவை நமக்கு நிலையான அமைதியையும் இன்பத்தையும் அளிக்க முடியா. அழியாத ஒன்றே உண்மையான நிலையான சாந்தியை அளிக்க முடியும். அந்த அழியாத பொருள் நமக்குள்ளேயே உள்ளது. — சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

வாரவெளியீடு விரோதிகிருது வருஷம் மார்கழி மாதம் 28 உ திகதி (12-1-72)

ஒரே பல்கலைக்கழகம்

இந்தப் பல்கலைக்கழகமா, தமிழ்ப் பல்கலைக்கழகமா வடக்கிலா, கிழக்கிலா? இப்படிப்பெரும் சர்ச்சைகளையும் பலபிரச்சினைகளையும் கிளப்பி குறிப்பாக வடக்குகிழக்கு மக்களையும் பொதுவாக இந்நாட்டு மக்களையும் குழப்பிக்கொண்டிருந்த ஒரு பிரச்சினைக்கு "வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலுமாக மூன்று பல்கலைக்கழகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கலிடோனியாவர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் ஆட்சிக்கு வந்ததும் தமது முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்திலும் அறிவித்து முற்றுப்புள்ளி வைத்தனர். வடக்கிலா, கிழக்கிலா இந்தப் பல்கலைக்கழகமா, தமிழ்ப் பல்கலைக்கழகமா என்ற சர்ச்சையில் முக்கிய பங்குகொண்டிருந்த தமிழரசுக்கட்சியினர் தமது நிலையை கொள்கையை விளக்கிக் கூறியிருப்பினும், ஒரே பல்கலைக்கழக மசோதா மீது நடைபெறும் விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய கோப்பாய்ப் பிரதிநிதி திரு. சி. எதிரவேலுப்பிள்ளை தெளிவாகவும் ஆணித்தரமாகவும் ஆட்சியமைக்கத்தில் இன்றைய ஆட்சியாளரும் முன்னைய ஆட்சியாளரும் புரிந்து கொள்ளக்கூடிய தாக எடுத்து வைத்ததுபோல் இதுவரை யாரும் விளக்கி விடுப்பதாகத் தெரியவில்லை. "சரித்திர வளர்ச்சியோட்டு இந்நாட்டு இருவேறு இனங்கள், தனிப்பட்ட பிரதேசங்களில், தனிப்பட்ட பொழிலாக்கோரத்தோடுவாழ்கின்றன இனியும் வாழப்போகின்றன; வளரப்போகின்றன. எனவே அந்தப்பகுதி மக்களின் அபிலாஷைகளையும் தேவைகளையும் பூர்த்திசெய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் வடக்கைச் சமுதாயமான தமது சமுதாய அமைப்பிற்கு ஒருமைப்பட்ட ஒரே பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படமுடியாதது" என்று திரு. எதிரவேலுப்பிள்ளை தமது கட்சியின் கொள்கையையும் தமது எடுத்துரையும் எடுத்துக்கூறிய தோடு ஒரே பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அரசாங்கத்தின் காரணங்களையும் அதற்குச் சாதகமானவாதங்களையும் தக்க சான்றுகள் காட்டி முறியடித்தார். அரசு திறமையைப்பாராட்டவேண்டும்.

ஆனால்...

இன்றுள்ள நிலையில் ஒரே பல்கலைக்கழகம் என்பது முடிந்தமுடிவாகிவிட்டது. இது திரு. எதிரவேலுப்பிள்ளைக்கே தெரியும். "ஏனைய வேண்டுகோளுக்குஇணங்கமாட்டார்கள் என்பதையும் அறிந்து இத்துடன் எனதுபேச்சை முடித்துக் கொள்கிறேன்" என்று அவர் பேசிமுடித்தது இதற்குச் சான்று. ஆனாலும் சொல்லவேண்டியதைச் சொல்லித்தானாகவேண்டும். இன்றுள்ளநிலை மாறியதும் இப்பொழுது சொல்லப்படும் நல்லகருத்துக்களைச் செயற்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவானதும் அரசாங்கம் அதற்கான செயற்படுத்தமுன்வரவேண்டாதென்பது என்ன நிச்சயம்?

இதுவரையிருந்து வந்த நான்கு பல்கலைக்கழகங்களுடன் வடக்கு, கிழக்கு, தெற்கு என மூன்று மாகாணங்களிலும் மேலும் மூன்று பல்கலைக்கழகங்கள் அமைத்து மொத்தம் ஏழு பல்கலைக்கழகங்கள் உருவாக்குவதற்கு கூட்டணி அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால் சென்ற வருடம் ஏப்ரல் மாதம் நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து இத்திட்டத்தை மாற்ற வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது இதற்கு அரசைக் குறை கூறவும் முடியாது. முப்பத்தி மூன்று பேர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள் இதற்காக நான்கு பல்கலைக்கழகங்களிலும் எத்தனை பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள்? இப்படி ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு பணம் விணாகச் செலவாகிறது!

இந்த வகையில் ஒரே பல்கலைக்கழகம் அமைக்கும் திட்டத்தை வரவேற்கத்தவறில்லை.

வடக்கிலும் தெற்கிலும் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட வேண்டிய தன் அவசியத்தைத்தமது அறிக்கையில் சிபார்சு செய்திருந்த நீடூம் கமிஷன்கூட வடக்கு, தெற்கில் பரிபூரணமான பல்கலைக்கழகங்களை உடனடியாக அமைக்கமுடியாவிட்டாலும் பின்னர் ஒருகாலத்தில் அவை பரிபூரணமான பல்கலைக்கழகங்களாக உருப்பெறக் கூடிய முறையில் அப்பகுதிகளில் பல்கலைக்கழக 'காம்பஸ்கள்' அமைக்கலாமெனக் கூறியிருந்தது.

ஒரே பல்கலைக்கழக மசோதாவும் இதற்கு வழிசெய்வதாக அந்தந்தப் பகுதிகளின் தேவைகளையும் சூழ்நிலைகளையும் அனுசரித்து இந்தப் பல்கலைக்கழக 'காம்பஸ்'கள் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இதேசமயம் இந்தக் காம்பஸ்களின் நிர்வாகத்திலும் பல்கலைக்கழக நிர்வாகத்திலும் அதிகாரவர்க்கத்தினரின் ஆளுகையைத் தகர்த்து இருக்குமென்றகச்சத்திற்கு நியாயமில்லாமலில்லை. இது பற்றியும் கல்வி அமைச்சர் கவனம் செலுத்தி ஒரே பல்கலைக்கழகத்திடம் சீராகவும் வெற்றிகரமாகவும் செயல்பட வழிசெய்யவேண்டும்.

378-வது கவிப்

சொழும்பு, புதன்

தேசிய வொத்தாசையின் 378 வது இலக்க கவிப் சீட்டிழுப்பு இன்று மாலை 5-15 மணிக்கு அலுத்கமநாரசபை மண்டபத்தில் நடைபெறுகிறது.

"விண்ணகத்திலிருந்து ஓர் அறிக்கை"

ஐயாறன் எழுதுவது

நேற்றுக்காலை ஓர் அன்பர் வந்து "என்ரொஜுலேசன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார். அவர் ஏன் பாராட்டவேண்டும் என்பது புரியவில்லை. விஷயமென்ன? என்று கேட்டேன்.

'நீங்கள் சொன்னதெல்லாம் அப்படியே சரி. அமெரிக்க "நியூஸ் வீக்" சஞ்சிகையில், சென்ற மூன்றும் திங்கிழமையன்று சமயம் என்ற தலைப்பிலே, விண்ணகத்திலிருந்து அறிக்கை' என்ற ருசியான விபரங்கள் வெளியாகியுள்ளன. அதைப் படியுங்கள் என்று அந்த சஞ்சிகையைக் காட்டினார். அதன் சுருக்கத்தை நீங்களும் படியுங்கள்.

'அமெரிக்காவில் காலஞ் சென்ற வண. ஆர்தர் போர்ட்' வாழ்ந்த காலத்தில், விண்ணகத்துடன் பேசுவதில் அதிக காலம் செலவிட்டார். அவர்வாழ்ந்த போது, சேர் ஆர்தர் கானன் டாயில் முதல் பிஷப்ஜேம்ஸ் வரையில் பல அறிஞர்கள் அவர்மூலம் விண்ணுலகத்துடன் தொடர்புகொண்டனர். அமெரிக்காவிலேயே அவர் தான் மிகச்சிறந்த 'மீடிய'மாக இருந்தார்.

'சென்றவருடம் அவர் காலமானதும், அவருக்குத் துணையாக உதவிசெய்து வந்த மிஸஸ் ரூத் மாண்ட்கோமரிக்கு உலகிருந்து ஏராளா தூண்டி, டைப்ரைட்டரிடம் செல்லச் செய்தது. அதிகு கற்றிக்கொண்டிருக்கும் போர்டின் ஆவிதான் தமக்கு அந்த உத்தலை ஏற்படுத்தியதாக அவர் நம்புகிறார்.

'தானே எழுதும்' முறையில் விண்ணகச் செய்திகளை எழுதிக்கொண்டுவந்த தாக்கு பயனாக 210 பக்கத்தில் 'அப்மாற்றப்பட்ட ஓர் உலகம்' என்ற ஒரு புத்தகம் இப்போது வெளியாகியுள்ளது. (விலை 5 டாலர் 95 சதம். கோவர்ட்.மெக்கான் அன்ட் நோவேக் பிரசுரம்) ஆவி உலகத்திலுள்ள வாழ்க்கை விபரங்கள் அதில் அடங்கியுள்ளன. பல புகழ் பெற்றவர்களின் ஆவிகளின் பேச்சுகளும் வெளியாகியுள்ளன. அந்த ஆசிரியை ஏற்கனவே சந்த ஆவிகளுடன் பேசிய வற்றை அவ்வப்போது பத்திரிகைகளில் எழுதிவந்திருக்கிறார்.

'போர்ட்- மாண்ட்கோமரி பேச்சின்படி, இறந்த புதிதில் ஆவிஉலகத்தில் தங்களை சரிப்படுத்திக்கொள்ள, மரணத்துக்குப்பின் வாழ்வுண்டு என்பதில் நம்பிக்கையில்லாதவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்களாம். விண்ணகத்துக்குப் புதிதாகவரும் ஆவிகள் அங்கு சென்றதும், தங்கள் புதிய சூழ்நிலையைப்பற்றி கருதாமல், தங்கள் உற்றார் உறவினருக்கும் மனைவிமக்களுக்கும் ஆதரவு கூறவே முற்படுகிறார்கள். ஆனால் ஆவியுலகத்திலுள்ள தங்களை அவர்கள் பார்க்கவோ கேட்கவோ முடியாதிருக்கும் நிலையைப் பார்த்ததும் எப்படி மனம் உடைகிறார்கள் என்பதை பல ஆவிகளும் விவரித்துள்ளனர். பிறகு தான் ஆவிகளிடையே தாங்கள் இறந்துவிட்டதை உணருகின்றன என்கிறார் போர்டு.

'ஒரு சிகரெட்டுக்கும், மதுபானத்துக்கும், சிற்றின்பத்துக்கும் சில ஆவிகள் மிகவும் ஆவலாட்டி அல்லல் படுகிறார்களாம்! இப் பழக்கங்களை சாவதற்குமுன் விடுவதே. ஆவிஉலகத்துக்குத் தங்களை சரியாகத் தயார்படுத்திக்கொள்வதாகுமென்றும் விண்ணகத்திலிருந்து கூறுகிறார் போர்ட்.

'ஸ்டாலின் மறுபிறப்பை ஒப்புக்கொண்டு இப்போது ரொடீஷியாவில் பிறந்திருக்கிறார். அங்கு ஒரு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த அவர் விரும்புகிறாராம்.

ஜோன் எப். கென்னடி மேற்கு ஆபிரிக்காவில் அமைதி ஏற்படுத்த தீவிரமாக முனைகிறார். அவரது சகோதரர் ரொபர்ட், அமெரிக்க தீவிரவாத எதிர்ப்புத் தலைவர்களை சாந்தப்படுத்த முயல்கிறார்; பரிசுத்தமான ஆவிகள் மிக உயர்ந்த நிலையில் இறைவனுடன் லயப்பட்டு இருக்கின்றன.....

வாழ்க்கையின் முடிவு மரணமல்ல வென்ற இந்நூல் பலருக்கும் நம்பிக்கையளிப்பதாகவுள்ளது என்று அச்சஞ்சிகை தெரிவிக்கின்றது.

0 0 0

ஆவிஉலகத் தொடர்பு பற்றி அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் 10 ஆயிரம் நூல்கள் வெளியாகியுள்ளனவாம் ஆவிகளின் பேச்சைப் பதிவுசெய்து கேட்ட விவரங்களை ஜேர்மனியிலிருந்து புதிதாக வெளியான நூலொன்று தெரிவிக்கின்றது. அதன் ஆங்கில மொழி பெயர்ப்பை கொழும்பில் ஓர் அன்பர் வரவழைத்திருப்பதைப் படித்தேன்.

உலகிற்கு நமக்குத் தெரியாத பல விஷயங்கள் புதிதுபுதிதாகக் கண்டுபிடிக்கப்படுகின்றன என்னென்ன அதிசயங்களைப் பார்க்கப்போகிறோமோ!

வடமராட்சியில்

தீப்பெட்டி தொழிற்சாலை! ரூபா 70,000 ஒதுக்கீடு

வருத்தித்துறை செக் வடமராட்சி தெற்கு மேற்குப் பகுதிகளில் தீப்பெட்டித் தொழிற்சாலையும் பின்னல் கையால் தொழிற்சாலையும் அமைக்கும் பொருட்டு கமர் 25,000 ரூபாவை ஆரம்ப மான்ய மாக வைத்தொழில் அமைச்சு வழங்கியுள்ளது.

வடமராட்சி தெற்கு மேற்குப் பகுதிகளான மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டத்தின்போது இப்பகுதிக் கமரியாதிகாரி திரு. கே. மாணிக்கவாசகர் இத்தகவலை வெளியிட்டார்.

இலத்தைக் காட்டில் ஒரு பனைக்கட்டித் தொழிற்சாலையை அமைப்பதற்கென 20,000 ரூபாவும் குடிவிடுதியில் மண்பாண்டத் தொழிற்சாலையை அமைப்பதற்கென 25 000 ரூபாவும் ஒதுக்கியுள்ளதாகவும் கமரியாதிகாரி தெரிவித்தார்.

கட்டைவேலி ப நோ க சங்கம் ஆரம்பிக்கவிருக்கும் பீடித் தொழிற்சாலையில் 135 படித்த பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமென்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

பத்து ஆண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

படம் எடுக்கப்படவேண்டியிருக்கும்.

ஒவ்வொரு நபருக்கும் படத்தில் மூன்று பிரதிகள் கொடுக்கப்படும். ஒன்று அடையாள அட்டையில் ஒட்டப்படும் மற்றவை இலாகா வைக்களில் வைக்கப்படக்கூடும் இந்தப் படங்கள் மூன்றுக்கும்படப்பிடிப்பாளர்கள் ஒரு ரூபாய்மட்டுமே அறவிட முடியும்.

பதிவுசெய்து கொள்ளப்படும் புகைப்படப்பிடிப்பாளர்கள் தமக்கு வேண்டிய கமிராக்கள் முதலிய பொருட்களை விசேஷ விலைகளில் அரசாங்க படப்பிடிப்பு பகுதியின் கடைகளிடமிருந்து கொள்ளலாம்.

பெப்ரவரி முதல் வாரத்தில் ஆரம்பமாகவிருக்கும் இந்தவேலைகளுக்குத் தேவையான கருவிகள், உபகரணங்கள் முதலியவற்றை கிழக்கு ஜெமனி கொடுத்துதவியுள்ளன. (சி பி ஏ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் வியாபாரத்தாரால் யாழ்ப்பாணம் வெல்லோவில் மேற்குவீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

செவ்வாயில் மலைகள்

நியூயோர்க், ஜன. 11

அமெரிக்காவினால் செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்ட மாரினர்-9 கடைசியாக அனுப்பியனுப்பிய படங்களில் செவ்வாயில் மலைத் தொடர்கள் பல இருப்பதாகக் காட்டுவதாகவும், அதில் சில மலைகள் இமயமலை அளவு பெரிதாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கீத சபை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அற்புதநாதன்; சிவனேசன் வரி குமாரசிங்கம்; மேரி அமலோற்பவநாயகி குலசேகரம்.

வாய்ப்பாட்டு: சாதாரண பிரிவு: முதலாம் பகுதி: சாவகச்சேரி- சாந்தினி மகாலிங்கம்; சிவமலர் இராமு; அமுதினி தம்பிராசா; ரஞ்சினி வசிநாடார்; கமலவேணி திருநாவுக்கரசு; மனமணி வைரவப; கமலேஸ்வரி சோமசுந்தரம். அம்சத்வனி இராசரத்தினம்; மாசிலாமணி செல்லையா; ஜெயநாயகி செல்வத்துரை [தொடரும்]

வருத்தித்துறை, செம்பாம்ப்பரணம் கச்சேரி நடிகச்செழுத்தாளர் திரு. கே. சிவசிதம்பரம் வருத்தித்துறை நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மரண அறிவித்தல்

வி. கு. சின்னப்புஐயர்

காரைநகர் அரசடிக்காடு கதிர்காமசுவாமிகோவில் தொண்டர் வி.கு. சின்னப்பு ஐயர் காலமாகிவிட்டார். இவர், விசுவநாதஐயர், ஸ்ரீநிவாசஐயர், இரத்தினம்மா, செல்லம்மா, மங்களாம்பிகை, பூரணம்பிகை ஆகியோரின் அன்புத்தந்தையாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் இன்றுபிற்பகல் 3 மணியளவில் காரைநகர் சாம்பலோடை வளவத்தில் நடைபெறும்.

உறவினர்களும், நண்பர்களும் இதனை அறிவித்தவாக ஏற்றுக்கொள்ளவும். 8372